மேலே இருக்கிற கருத்துகளைச் சொல்ல வேண்டாமா? வெறும் பாலிசி மட்டும் இல்லையே! சட்டம் என்று சொல்கிற நேரத்திலே, சட்டத்தின், விதியின்..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 8 மணிக்கு உங்களுக்குக் கிடைத்திருக்கிறது. அதுபற்றிய உங்களுடைய கருத்தைப் பதிவு செய்வதற்கு வாய்ப்பு இருக்கிறது.

## 4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்தின் மீதான உச்சவரம்பினை நிர்ணயித்தல்) திருத்தம் மற்றும் தனி வகை முறைகள் சட்டமுன்வடிவு, 2003

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்தின் மீதான உச்சவரம்பினை நிர்ணயித்தல்) திருத்தம் மற்றும் தனி வகை முறைகள் சட்டமுன்வடிவு. மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்தின் மீதான உச்சவரம்பினை நிர்ணயித்தல்) திருத்தம் மற்றும் தனி வகை முறைகள் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

## 3. சட்டமுன்வடிவுகளின் நகல்கள் தாமதமாக வந்ததால், படித்து, பேசுவதற்கு நேரமில்லை எனத் தெரிவிக்கப் பட்ட கருத்து—தொடர்ச்சி

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** Honourable Speaker Sir, even without circulating the Bill, how can it be moved?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, சர்குலேட் செய்தாகிவிட்டது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, It is absolutely wrong to say that the Bill is not circulated. Bills have been already circulated on time.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேற்று இரவே கொடுக்கப்பட்டுவிட்டது.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** இல்லை, கிடைக்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. கிடைக்கவில்லை என்றால் என்னவென்று கேளுங்கள்.

**4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)**—தொடர்ச்சி.

**(அ) தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்தின் மீதான உச்சவரம்பினை நிர்ணயித்தல்) திருத்தம் மற்றும் தனி வகை முறைகள் சட்டமுன்வடிவு, 2003**—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு & ஆயத்தீர்வை மற்றும் வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.